**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான 2020ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கப் பணிப்புரை**

---

**கொடுப்பனவுகளுக்கெதிரான ஆவணங்கள் மற்றும் திறந்த கணக்குக் கொடுப்பனவு நியதிகள் என்பன மீது மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்படும் பணிப்புரை**

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இறக்குமதிகளை மற்றும் வெளிநாட்டு நாணய முதலீடுகளை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் மீது 2020 மாச்சு 19ஆம் திகதியிடப்பட்ட 2020இன் 01ஆம் இலக்க வங்கித்தொழில் பணிப்புரைகளின் இணைப்பு I இற்கான **அட்டவணை ஆ** இல் குறித்துரைக்கப்பட்ட அத்தியாவசியமற்ற நுகர்வோர் பொருட்களின் இறக்குமதிக்கான கொடுப்பனவுகளுக்கெதிரான ஆவணங்கள் மற்றும் திறந்த கணக்குக் கொடுப்பனவு நியதிகள் என்பவற்றின் கீழ் 2020 யூன் 20ஆம் திகதி வரை வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிப்பதனை உடனடியாக நடைமுறைக்கு வரும்விதத்தில் இடைநிறுத்துமாறு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் வேண்டப்படுகின்றனர்.

*(ஒப்பம்)* - ஆர்.ஆர். ஜயரத்ன

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்.**

**2020 மாச்சு 20**